திருவள்ளூர், காஞ்சி, செங்கை மாவட்ட கிராம சபை கூட்டங்களில்

ஊராட்சி நிர்வாகம், பொதுசெலவினம் குறித்து விவாதம்

அமைச்சர், ஆட்சியர், எம்.பி, எம்எல்ஏக்கள் பங்கேற்பு

● திருவள்ளூர்/காஞ்சி/செங்கை

திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நேற்று நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டங்களில் ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுசெலவினம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டன. பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 526 ஊராட்சிகளில் பெரும்பாலானவற்றில் நேற்று சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், ஜல்ஜீவன் இயக்கம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டன. பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், வன்னிப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று, பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

அப்போது, மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள், பள்ளிகள், மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களில் போதிய கழிப்பறைகளை அரசு கட்டித்தர முன்வராதது ஏன் என கேள்வி எழுப்பியதோடு, குடிநீர் தட்டுப்பாடு, செவிலியர், மருத்துவர்கள் இல்லாத துணை சுகாதார நிலையம் மற்றும் சீரமைக்கப்படாத சாலைகள் உள்ளிட்டவை குறித்து கேள்வி எழுப்பினர். இதற்கு பதில் அளித்து பேசிய மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்கள் முன்வைத்த கோரிக்கைகளை பரிசீலனை செய்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் தீர்வு ஏற்பட உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். இந்நிகழ்வில், பொன்னேரி எம்எல்ஏ துரை சந்திரசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதே போல், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், மாநெல்லூர் ஊராட்சியில் நடந்த கிராம சபைக் கூட்டத்தில், மாநெல்லூர் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளில் நடந்த கிராம சபைக் கூட்டங்களில், வரவு செலவுகள் வாசிக்கப்பட்டன. ஊராட்சிகளின் வளர்ச்சிக்கு தேவையான பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டன. மேலும், பரந்தூர் விமான நிலைய திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஏகானாபுரம் ஊராட்சியில் பொதுமக்கள் கிராம சபைக் கூட்டத்தை புறக்கணித்தனர்.

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் வீராபுரம் கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் ஆ.ர.ராகுல் நாத் தலைமையில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று கிராம மக்களுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, காந்தியடிகளின் 155-வது பிறந்த தினத்தை முன்னிட்டு அமைச்சர், ஆட்சியர் காந்தியடிகளின் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இக்கூட்டத்தின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் பி.சுபா நந்தினி, ஊரக வளர்ச்சித் துறை திட்ட இயக்குநர் இந்துபாலா, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த் குமார் சிங், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உமா, எம்.பி. செல்வம், எம்.எல்.ஏ வரலட்சுமி, உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேபோல் தாம்பரம் அருகே அகரம் தென் ஊராட்சியில் தலைவர் ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் தாம்பரம் எம்எல்ஏ எஸ்.ஆர். ராஜா பங்கேற்று மக்கள் குறைகளை கேட்டறிந்தார். திரிசூலம் ஊராட்சியில் நடைபெற்ற கூட்டத்தில் பல்லாவரம் எம்எல்ஏ இ. கருணாநிதி பங்கேற்று மக்களின் குறைகளை கேட்டறிந்தார்.

வடநெம்மேலி ஊராட்சியில் நடந்த சிறப்பு கிராம சபை கூட்டத்தில், ஊரக வளர்ச்சி இயக்குநர் பொன்னையா பங்கேற்றார். அப்போது பொதுமக்கள், வடநெம்மேலி பகுதியில், சமுதாய நலக் கூடம் மற்றும் மயானத்தில் எரிமேடை அமைத்துத் தரவேண்டும், வீட்டுமனை பட்டா இல்லாதவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தனர். அக்கோரிக்கைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை எடுப்பதாக திருப்போரூர் ஒன்றியக் குழு தலைவர் இதயவர்மன் உறுதியளித்தார்.

காஞ்சி, செங்கை, திருவள்ளூர் மாவட்ட

கதர் அங்காடிகளில் தீபாவளி சிறப்பு விற்பனை தொடக்கம்

● காஞ்சிபுரம்

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள கதர் அங்காடிகளில் தீபாவளி சிறப்பு விற்பனை தொடங்கியது.

காஞ்சிபுரம் மாவட்டம் சிறுகாவேரிப்பாக்கம் கதர் அங்காடி விற்பனை நிலையத்தில் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி தீபாவளி சிறப்பு விற்பனை தொடங்கப்பட்டது. 30 சதவீத தள்ளுபடியில் கதர், பாலியஸ்டர் பட்டு ரகங்கள் விற்பனை செய்யப்பட உள்ளன.

இந்த விற்பனையை காஞ்சிபுரம் எம்எல்ஏ சி.வி.எம்.பி. எழிலரசன் தொடங்கி வைத்தார். இந்த அங்காடியில் கதர், பட்டு, பாலியஸ்டர் ரகங்களுக்கு 30 சதவீத தள்ளுபடி, உல்லன் ரகங்களுக்கு 20 சதவீத தள்ளுபடியை மத்திய, மாநில அரசுகள் அறிவித்துள்ளன. அதன்படி விற்பனை செய்யப்பட உள்ளன.

மேற்குறிப்பிட்ட கதர் ரகங்களுடன் கிராமப் பொருட்களான தேன், ஜவ்வாது, சோப்பு வகைகள், சாம்பிராணி வகைகள், வலி நிவாரணி தைலம், ஊதுபத்தி, மெழுகுவத்தி, மூலிகை பற்பொடி மற்றும் பனை பொருட்களான சுக்கு காபி பவுடர், பனை வெல்லம் மிட்டாய் சுத்தமான பனங்கற்கண்டு, மர செக்கைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட கடலை எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய், பாரம்பரிய அரிசி வகைகள், சாமை, திணை, குதிரைவாலி, சீரக சம்பா, மாப்பிள்ளை சம்பா, மதிப்பு கூட்டப்பட்ட தேன் வகைகள் ஆகிய பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இவை தவிர அதிக கலப்படமில்லாத நாட்டுச் சர்க்கரை, பொடி வகைகள் (உண்ணும் ரகம்), இயற்கை பொடி வகைகள், துவைக்கும் சோப்பு திரவங்கள் மற்றும் பினாயில்கள், மெத்தை இணைந்த கோரைப் பாய்கள், பிளாஸ்டிக் பாய்கள், பந்தி பாய்கள் மற்றும் தேங்காய் நார் மிதியடிகள் போன்ற பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு ரூ.2 கோடிக்கு இங்கு விற்பனை நடந்துள்ளது. இந்த ஆண்டு ரூ.3 கோடிக்கு விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு ஊழியர்கள் சுலப தவணையிலும் இங்கு பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், காஞ்சிபுரம் ஒன்றிய குழுத் தலைவர் மலர்க்கொடி குமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

2023-ம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் தீபாவளி பண்டிகையின் சிறப்பு தள்ளுபடி விற்பனையை காஞ்சிபுரத்தில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தொடங்கி வைத்தார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம் (காதி கிராப்ட்) சார்பில் அமைக்கப்பட்டுள்ள விற்பனை அங்காடியில் நேற்று காதி தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட குடிசைத் தொழில் ஆய்வாளர் ரங்கநாதன், தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரிய பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

காஞ்சி மாவட்டம் சிறுகாவேரிப்பாக்கம் கதர் அங்காடியில் தீபாவளி சிறப்பு விற்பனையை தொடங்கி வைக்கிறார் எம்எல்ஏ சி.வி.எம்.பி.எழிலரசன். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ் உள்ளிட்டோர்.

தாம்பரத்தில் நீர்நிலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

● குரோம்பேட்டை

தாம்பரம் அருகே சிட்லபாக்கம் ஏரி ரூ.25 கோடியில் சீரமைக்கப்பட்டது. ஆனால் முழுமையாக நீர்வள ஆதாரத் துறையினர் புனரமைப்பு பணியை மேற்கொள்ளவில்லை. அதேபோல் திருநீர்மலை ஏரியும் கழிவுநீருடன் ஆகாய தாமரை நிறைந்து மோசமான நிலையில் உள்ளது.

இந்த ஏரிகளை முறையாகப் பராமரிக்க வேண்டும் என்றும், விரைவில் சீரமைக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி பல்வேறு பொதுநல அமைப்புகள் நேற்று விழிப்புணர்வு பேரணியை நடத்தின. குரோம்பேட்டை அருகே திருநீர்மலை ஏரியை மீட்க வலியுறுத்தி நடைபெற்ற பேரணியில் பல்லாவரம் எம்எல்ஏ இ.கருணாநிதி பங்கேற்றார்.

அதேபோல் சிட்லபாக்கம் ஏரியை புனரமைக்க வலியுறுத்தி நடைபெற்ற பேரணியில் தாம்பரம் எம்எல்ஏ எஸ்.ஆர். ராஜா மற்றும் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் பங்கேற்றனர். இதேபோல் பல்வேறு பொதுநல அமைப்புகள், பொது மக்கள் பலரும் இதில் பங்கேற்றனர்.

நீர்நிலை ஆதாரங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வுப் பேரணியில் பங்கேற்றவர்கள் பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் சென்றனர்.

சோழன் விரைவு ரயிலில்

ரூ.1 கோடி மதிப்பிலான தங்க நகைகள் பறிமுதல்

ரயில்வே போலீஸார் விசாரணை

● செங்கல்பட்டு

சோழன் விரைவு ரயிலில் ரூ.1 கோடி மதிப்பிலான தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பாக ரயில்வே போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை எழும்பூரில் இருந்து தஞ்சாவூர் வரை சோழன் விரைவு ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரயில் தாம்பரம், செங்கல்பட்டு, விழுப்புரம் ஆகிய பகுதிகளை கடந்து செல்கிறது. வழக்கம்போல நேற்று சோழன் விரைவு ரயில் சென்னை எழும்பூரில் இருந்து புறப்பட்டு செங்கல்பட்டு ரயில் நிலையம் வந்தடைந்து பயணிகள் ரயிலில் ஏறிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் செங்கல்பட்டு ரயில்வே பாதுகாப்பு படை போலீஸார் வழக்கமான சோதனையில் ஈடுபட்டனர்.

ரயிலின் முன்பதிவு செய்யப்பட்ட எஸ்.1 கோச்சில் சந்தேகத்துக்கு இடமான முறையில் கழிப்பறையில் பைகளுடன் இருந்த இருவரை விசாரித்தபோது, பையில் ஏராளமான தங்க நகைகள் இருப்பது தெரியவந்தது. அதற்கான உரிய ஆவணங்கள் ஏதும் இல்லாததால் போலீஸார் அவர்களை காவல் நிலையம் அழைத்து வந்தனர்.

இதையடுத்து நடத்திய விசாரணையில், அவர்கள் சென்னை சவுகார்பேட்டையை சேர்ந்த அமித் பி ஜெயின் (44) மற்றும் ராம்லால் (44) என்பதும், அவர்கள் ரயிலில் தங்கத்தை எடுத்து சென்று நகை கடைகளுக்கு வியாபாரம் செய்ய உள்ளது தெரியவந்தது. இதையடுத்து பறிமுதல் செய்யப்பட்ட தங்க நகைகள் வணிகவரித் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளது. இதன் மதிப்பு ரூ.1 கோடி இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

போதைப் பொருள் இல்லா தமிழகத்துக்கான

'ஆவடி இரவு மாரத்தான்' ஓட்டத்தில் 6,000 பேர் பங்கேற்பு

● ஆவடி

போதைப்பொருள் இல்லா தமிழகத்துக்கான 'ஆவடி இரவு மாரத்தான்' ஓட்டம் நேற்று ஆவடியில் நடைபெற்றது. இதில், 6 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

போதைப் பொருள் இல்லா தமிழகத்துக்கான 'ஆவடி இரவு மாரத்தான்' ஓட்டம் கடந்த ஆண்டு அக்.2-ம் தேதி நடைபெற்றது. அப்போதைய ஆவடி காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோரின் முன்னெடுப்பில் இந்த இரவு மாரத்தான் நடைபெற்றது.

தற்போது சென்னை காவல் ஆணையராக சந்தீப் ராய் ரத்தோர் உள்ள நிலையில், போதைப் பொருள் இல்லா தமிழகத்துக்கான, 'ஆவடி இரவு மாரத்தான்' ஓட்டம் -2023 நேற்று நடைபெற்றது.

சென்னை பெருநகர காவல்துறை, ஆவடி காவல் ஆணையரகம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஆகியவை இணைந்து, இளைஞர்களை போதை பொருள் பயன்படுத்துதல் உள்ளிட்ட தீய பழக்கங்களுக்கு அடிமையாகாமல் தடுத்து, வாழ்வியல் முறையில் நல் வழிபடுத்தி, ஆரோக்கியத்தை பேணி காப்பதற்காக விளையாட்டில் ஈடுபடுத்தி ஊக்குவிப்பதை நோக்கமாக வைத்து இந்த மாரத்தான் ஓட்டத்தை நடத்தின.

21, 10, 5 கிமீ தூரம் என, 3 பிரிவுகளில் நடைபெற்ற இந்த மாரத்தான் ஓட்டம், ஆவடி, வேல்டெக் பல்கலைக்கழக வளாகத்தில் தொடங்கியது. இதை சென்னை காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் தொடங்கி வைத்தார்.

மீஞ்சூர்- வண்டலூர் வெளி வட்டச் சாலை வழியாக நடைபெற்ற இந்த ஓட்டத்தில் பள்ளி, கல்லூரி மாணவ- மாணவிகள், ஓட்டப் பந்தய வீரர்கள், பொதுமக்கள் என 6 ஆயிரம் பேர் பங்கேற்றனர். இந்த ஓட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள், பண வெகுமதிகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஆவடி காவல் ஆணையர் சங்கர், சென்னை காவல் கூடுதல் ஆணையர்கள் அஸ்ரா கர்க் (வடக்கு), சுதாகர் (போக்குவரத்து காவல்) மற்றும் இணை ஆணையர்கள் விஜயகுமார் (ஆவடி) மனோகர் (மேற்கு மண்டலம்) உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஆவடியில் நேற்று நடைபெற்ற போதைப் பொருள் இல்லா தமிழகத்துக்கான 'ஆவடி இரவு மாரத்தான்' ஓட்டத்தை, சென்னை காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் தொடங்கி வைத்தார். உடன், இணை ஆணையர் விஜயகுமார் உள்ளிட்டோர்.

கல்பாக்கம் நகரியப் பகுதியில் வாக்கத்தான் நடைபயணம்

இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மைய இயக்குநர் தொடங்கிவைத்தார்

● கல்பாக்கம்

செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கம் நகரியப் பகுதியில் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் ஒருங்கிணைப்பில், தூய்மை இந்தியா திட்டத்தை செயல்படுத்தும் விதமாக காந்தி ஜெயந்தியான நேற்று வாக்கத்தான் நடைபயணம் நடைபெற்றது.

இந்த நடைபயணத்தை, இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மைய இயக்குநர் வெங்கட்ராமன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில், அணு சக்தி துறை மைய வளாகத்தில் இயங்கும் அனைத்து அணுசக்தி பிரிவுகளின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர், மக்கள் பிரதிநிதிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கேந்திர வித்யாலயா மற்றும் அணு சக்தி நடுவண் பள்ளி மாணவ - மாணவிகள் என 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

நகரியப் பகுதியில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளியில் தொடங்கிய நடைபயணம் சதுரங்கப்பட்டினம் ஊராட்சியின் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் பள்ளியை அடைந்தது.

முன்னதாக டச்சுக் கோட்டை எதிரே, கடற்கரையில் 'சுகாதாரத்தை காப்போம், பிளாஸ்டிக்கை ஒழிப்போம்' என அனைவரும் உறுதிமொழி எடுத்து கொண்டனர். அப்போது, பிளாஸ்டிக்கை ஒழிக்க மஞ்சப்பை உள்ளிட்ட பைகளுக்கு அணு சக்தி துறை நிர்வாகம் உதவி செய்தால், அனைத்து ஊராட்சிகளிலும் பிளாஸ்டிக்கை ஒழிப்போம் என தீர்மானம் நிறைவேற்றுவோம் என நெய்குப்பி ஊராட்சி மன்ற துணை தலைவர் கதிரவன், சதுரங்கப்பட்டினம் சமூக ஆர்வலர் ரமேஷ் ஆகியோர் இயக்குநரிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதையடுத்து, தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என இயக்குநர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த பலர் பங்கேற்றனர்.

கல்பாக்கத்தில் நடைபெற்ற வாக்கத்தான் நடைபயணத்தை, இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மைய இயக்குநர் வெங்கட்ராமன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

G20 boost: India prepares for 4th summit with African Union

Long delayed, the key meet likely in Nairobi in three months

SUBHAYAN CHAKRABORTY
New Delhi, 2 October

Keen to capitalise on the growing geopolitical support from African nations after the recently concluded G20 summit, India is working with the African Union to hold the fourth India-Africa Forum Summit later this year in Kenya's Nairobi, sources said.

Prime Minister Narendra Modi is expected to attend the mega meet along with as many as 50 African leaders, they added. First held in New Delhi in 2008, the India-Africa Forum Summit marked India's initial diplomatic efforts to seek a comprehensive partnership with the African bloc of nations as a whole, at a time when China had begun its own outreach.

Subsequently, the second and third summits were held in the Ethiopian capital of Addis Ababa in 2011 and New Delhi in 2015. But despite a plan to hold it every three years, the summit has been postponed since then owing to the Covid pandemic, among other reasons. The upcoming summit will be held in late November or early December, the sources said. "There had been an expectation that the fourth summit would be held during India's presidency of the G20 when engagements between Africa and India reached unprecedented levels. A summit would showcase the diverse and strong ties that have grown between both the powers in the past eight years," a senior diplomat from an African embassy posted in New Delhi said.

In January, India virtually held the 'Voice of the Global South' summit, which was attended by 47 of the 54 African nations. Their recommendations were adapted into India's official G20 agenda. Subsequently, a sustained push by India saw the African Union being inducted as a permanent G20 member. Before this, only one country, South Africa, from the entire African continent had been part of the G20.

PM Narendra Modi (*right*) with Azali Assoumani, chairperson of the African Union, during the G20 summit in New Delhi FILE PHOTO

Trade and infra ties

The government is working on initiatives aiming to deepen economic relations and infrastructure ties between India and Africa, which may be announced at the summit, an official said. While Africa is a huge market encompassing a $3 trillion economy and 1.3 billion people, internal trade between African economies remains much lower than their trade with external partners. Meanwhile, its trade with China has massively increased to make Beijing Africa's second-largest trading partner overall, after the European Union.

New Delhi hopes to change that by pitching India as an alternative source for many product categories, which are located geographically closer. As of 2022, India was the third-largest trading partner for Africa, accounting for 7 per cent of exports ($32.3 billion) and 5 per cent of imports ($28 billion), a paper by the International Monetary Fund showed in May.

The Exim Bank, which provides export financing and government-directed lending to other countries, is already supporting over 300 small Indian companies to expand business in Africa. With nearly $75 billion of investments by Indian companies, India is among the top five investors in Africa.

The official G20 dialogue forum with the global business community, the Business20 (B20), had extensively worked on African economic integration under India's G20 presidency. The subject has evinced special interest from the Prime Minister since it is an area where he wants to leave a legacy, Bharti Airtel Chairman Sunil Bharti Mittal, who headed the B20 council, had earlier told *Business Standard*.

Sources said B20 suggestions in this regard would be discussed at the upcoming summit and efforts made to deploy Indian solutions to key socio-economic challenges, wherever necessary.

Dagga case shows why removing govt officers from service isn't easy

SUBHOMOY BHATTACHARJEE
New Delhi, 2 October

The recent compulsory retirement of Rinku Dagga from service conveys a message of penalty, but she is not the first officer whose services have been terminated in this manner since 2020 when the rules governing government officers were expanded. She is one of 88.

Dagga, an Indian Administrative Service (IAS) officer, and her husband, Sanjeev Khirwar (also an IAS officer), had made headlines last year for reportedly getting sportspersons to finish training early so that they could walk their dog in a stadium in New Delhi. While Khirwar was transferred to Ladakh, Dagga, who was earlier sent to Arunachal Pradesh, has now been compulsorily retired.

The new rules for such compulsory retirement clarify that these orders are not necessarily offered "as a penalty under CCS (CCA) [Central Civil Services (Classification, Control and Appeal)] Rules, 1965 (which) is distinct from these provisions".

Dagga's service has been terminated under Fundamental Rules (or FR) 56(j), Rule 48 of Central Civil Services (CCS) Pension Rules, 1972, in "public interest". So, unless the office concerned, which in this case is the Department of Personnel and Training, decides otherwise, it is considered a termination and not a penalty. This action is the toughest that the government could have taken since the rules governing the protection of service of state government officials in India are stringent. Dagga is a 1994 batch Arunachal Pradesh-Goa-Mizoram and Union Territory (AGMUT) cadre officer.

The compulsory retirement is part of a half-yearly exercise nowadays, done for cases where the government wants to get rid of officers, but without taking the disciplinary proceedings route. As a review by the Department of Personnel and Training a few years ago noted, a Central Vigilance Commission (CVC) manual prescribes that disciplinary proceedings have "a realistic time schedule of nearly 25 months for completion".

The compulsory retirement route offers a way out. Every six months, departments can conduct the weeding-out exercise for officers, but after the officer "attains the age of 50/55 years or completes 30 years of service, whichever occurs earlier". Dagga is 50-plus.

The Section used against Dagga, as reported to Parliament, notes, "The objective of the review process under the FR 56(j) (or) similar provisions is to bring efficiency and to strengthen the administrative machinery". As the table (service record) shows, in the three-year period from April 2020 to March 2023, this section has been applied on 122 officers.

What do the Sections say?

There are two provisions in the Fundamental Rules that guide how the government can deal with the removal of officers from the central civil services. There is Section FR 56 (k), which allows an employee to retire from service voluntarily with all pension benefits before attaining the age of retirement. And, there is Section FR 56 (j), which notes that "the appropriate authority has the absolute right to retire, if it is necessary to do so in public interest, any government employee". The caveat is that FR-56 (j) and the related All India Services (Discipline and Appeal) Rules, 1969, for putting out an officer to pasture apply to those officer whose "performance has been reviewed and found unsatisfactory". The operative word is "public interest".

The National Democratic Alliance (NDA) government has tried to revise these stiff rules to ensure there are at least specific timelines in the procedures related to disciplinary proceedings, according to a Parliament reply. Yet, as a former government employee pointed out, "Asking an officer to leave while keeping their pension intact does not mean much."

The pension gets reduced to two-thirds only if the government, after consultation with the Union Public Service Commission, decides that "the retirement benefits shall be paid at such reduced scales as may not be less than two-thirds of the retirement benefits under FR 18 and 19".

SERVICE RECORD

Category	No. of officers
Orders under 56(j)	122
Sent on compulsory retirement	88
CVC recommended action	12,756
Action sanctioned for	719

Source: Parliament replies

CRISIL SME TRACKER

Revving up: Outlook, opportunities for auto component SMEs in 2024

After a robust 16–18 per cent growth fuelled by strong demand from automobile original equipment manufacturers (OEMs) in financial year 2023, SMEs in the auto component sector anticipate an 8–10 per cent growth in fiscal year 2024. Domestic demand from passenger vehicles will continue to rise, building upon the all-time highs of fiscal year 2023. Commercial vehicles are set to exceed pre-Covid levels, while two-wheelers will continue to recover but remain below their 2019 highs. Despite facing several challenges, export demand in 2024 is expected to show moderate growth, buoyed by a modest increase in demand from the US, Germany, Italy, and Japan. OEMs are exploring new sourcing opportunities to enhance the diversification of their supply chains. This shift is driven by improvements observed in vital components like engines, gearboxes, and transmissions. Tight global conditions prevent further expansion. The replacement market is expected to modestly increase in 2024, following its improvement in 2023, driven by higher sales in FY19. SMEs in the sector account for approximately 25–30 per cent of the total industry turnover, mainly in suspension, braking, and body/chassis segments. Auto component makers are categorised into tier–1, tier–2, and tier–3. Most Indian OEMs source components from tier–1 manufacturers, who, in turn, have tier–2 suppliers, followed by tier–3 manufacturers in their supply chains. Margins for auto component manufacturers are expected to improve due to correction in raw material costs, improved offtake leading to higher capacity utilisation.

SHARE OF MSMEs IN THE SECTOR



Source: CRISIL MI&A Research

— TENDER CARE —

— Advertorial

INDIAN BANK OBSERVES ONE HOUR SHRAMDAAN AS PART OF SWACHHATA HI SEVA (SHS) CAMPAIGN 2023

Indian Bank participated actively in "Ek Tareekh Ek Ghanta", organized under the aegis of the Swachhata Hi Seva (SHS) campaign, to commemorate the 9th anniversary of Swachh Bharat Mission. On 01st October 2023, Indian Bank continued its engagement in the SHS campaign with another significant event, 'One hour Shramdaan' at Rani Meyyammai Girls Higher Secondary School, Chennai led by Shri. S. L. Jain, MD & CEO of Indian Bank and Executive Directors Shri Imran Amin Siddiqui, Shri Mahesh Kumar Bajaj, and Shri Ashutosh Choudhury, along with customers and other Senior Officials of the Bank. After the Shramdaan, School bags were distributed to the students of the school, belonging to underprivileged sections of the society.

CENTRAL BANK OF INDIA, ZONAL OFFICE, CHENNAI, EMBARKS ON SWACHCHATA MISSION AT MARINA BEACH

Central Bank of India's Zonal Office, Chennai, spearheaded a comprehensive cleanliness campaign at the iconic Marina Beach. This initiative, conducted under the Swachchata Mission drive, brought together dedicated staff members from the Zonal Office and Regional Office, who worked tirelessly towards creating a cleaner and more vibrant environment. Led by Mr. Arvind Kumar, Zonal Head, and Mr. Santosh Srivastava, Regional Head. Mr. Arvind Kumar addressed the gathered volunteers and underscored the paramount importance of cleanliness in our lives. He emphasized that a clean environment not only enhances the quality of life but also reflects a profound sense of civic responsibility. The campaign witnessed active participation from staff members and their family members who wholeheartedly contributed their time and efforts.

NMDC JOINS INDIA'S 'SWACHHATA HI SEWA' CAMPAIGN

Leading CPSE, NMDC joins the National Swachhata Movement - Swachhata Hi Sewa from September 15 to October 2, 2023. As a part of Swachhta Hi Seva Campaign, employees pledged to devote 2 hours per week towards cleanliness for a clean and green nation at its Head Office and Projects across country. In the spirit of Shramdaan, NMDC employees started the campaign at their workplace by cleaning their desks, cabinets, offices and workshops. On the Swachh Bharat Abhiyan, company's CMD (Additional Charge) Shri Amitava Mukherjee said, "We must come together and devote our resources towards a Clean India, Green India. With large-scale Swachhata drives, NMDC is proud to be taking part in the National Cleanliness Movement."NMDC will also be conducting a nationwide cleanliness drive, 1 Tareekh 1 Ghanta 1 Saath on 1st October where one village by each project in the respective locations- Kirandul and Bacheli in Chhattisgarh, Donimalai in Karnataka and Panna in Madhya Pradesh will be covered.

SWACHATA HI SEVA (SHS) – ONE HOUR SHRAMDAAN BY CANARA BANK

Canara Bank having it's Head Office at Bengaluru organized Swachata Hi Seva campaign ("Ek Tareek, Ek Ghanta") on 1st October,2023 at 10 am Pan India with theme "Garbage Free India". Shri K Satyanarayana Raju, Managing Director & CEO along with all Executive Directors, Chief General Managers, General Managers, other Executives and staff including Bengaluru citizens have participated in cleanliness drive at Krishna Rao Park, Dewan Madhava Rao Road and Netkalappa Circle, near Dwarakanath Bhavan, Basawanagudi, Bengaluru which was a grand success.

More than 500 participants have cleaned the entire area, collected the garbage. The collected garbage is segregated into different categories viz. dry waste, plastic and stacked in dumping yard of Krishna Rao Park for further processing & disposal

KARNATAKA BANK ENABLES PAYMENT OF GOODS AND SERVICES TAX (GST)

Karnataka Bank has enabled the service of collection of Goods and Services Tax (GST) through multiple modes of collections such as Over the Counter (OTC) and through Internet Banking facility. Now, all the customers of Karnataka Bank can pay GST at their convenience through Internet Banking facility or through all Branches of the Bank.

Speaking on the occasion Shri Srikrishnan H, Managing Director & CEO, said, "This is an important move to improving the overall customer experience and a very critical value addition. While this facility will help all our borrowing customers to route GST payments through our Bank, it will further improve CASA & float. Our Bank is working towards offering a "one-stop" digital solution for all the statutory payments to customers and also to the general public, thereby contributing to digitisation of Govt. Payments". Mr. Sekhar Rao, Executive Director & other top executives of the Bank were present on the occasion.

CENTRAL BANK OF INDIA ORGANISES CLEANLINESS ACTIVITIES 'SWACHHATA HI SEVA CAMPAIGN (SHS)

In terms of Government of India, Ministry of Finance, Department of Financial Services letter no.44 dtd.29/09/2023. Central Bank of India on 1st October 2023 cleanliness activities 'SWACHHATA HI SEVA CAMPAIGN (SHS) conducted at nearby area of zonal office premises campus, Bank Street, Koti, Hyderabad (photographs are attached herewith). The following Executives are participated Shri DHARASING NAIK K, Zonal Head/General Manager, Shri Satish N Talreja, Dy. Zonal Head, Shri Vivek Kumar Srivastava, Regional Head, Hyderabad and Smt Ch Satyavani, Asst. General Manager and other executives of Zonal Office, and Regional Office, Hyderabad.